செ.வெ.எண்.46 நாள்.18.09.2017.

திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் துப்புரவு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும், தூய்மை தொடர்பான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் துப்புரவு பணிகள் தொடக்க நிகழ்ச்சி மற்றும் தூய்மை தொடர்பான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி இன்று (18.09.2017) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் மருத்துவமனை வளாகம், மருத்துவக்கல்லூரி வளாகம், விடுதி வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் தூய்மைப் பணிகளை தொடங்கி வைத்தார். மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் அனைவரும் தூய்மை தொடர்பான உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சித்தி அத்திய முனவரா, துணை முதல்வர் மரு.ரேவதி, லயன்ஸ் கிளப் முன்னாள் கவர்னர் திரு.சுதந்திரலட்சுமி, திருநெல்வேலி தென்றல் கிரின் சிட்டி லயன்ஸ் கவர்னர் திரு.மாயாண்டி, பொருளாளர் திரு.சுப்பையா, செயலாளர் திரு.குணசீலன், திருநெல்வேலி ரோட்டரி கிளப் சென்றல் தலைவர் திரு.உலகராஜ், செயலாளர் திரு.சரவணன், உதவி ஆளுநர் திரு.யூசுப்ராஜ் உள்பட அலுவலர்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.